பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 15 செவ்வாய்க்கிழமை 01.11.2022 கதிர் 359

**இது ரகசியம் அல்ல!**

நாளை நடக்கும், நாளை நடக்கும் என்று விடயங்களை ஒத்திப் போடுபவர்களை 'திருநாளைப் போவார்' என்று கூறுவது உண்டு. இல்லையேல் அவர்கள் ஒப்பேற்ற வேண்டிய விடயத்தை பிள்ளையார் கல்யாணம் என்பார்கள்.

☞2

# வலி. வடக்குக் காணி சுவீகரிப்புக்கு எதிராக நாளை பல்கலை மாணவர் ஏற்பாட்டில் கவனவீர்ப்புப் போர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.01

வலி வடக்கு காணி சுவீகரிப்பிற்கு எதிதிராக கவன வீர்ப்புப் போராட்டமொன்றை மேற்கொள்வதற்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஊடக சந்திப்பொன்றை ஏற்படுத்தி அழைப்பு விடுத்துள்ளது.

வலி.வடக்கில் இராணுவத்தின் வசம் உள்ள 1,614 ஏக்கர் காணியையும் முழுமையாக சுவீகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு காணி அமைச்சின் மேலதிக செயலாளர் பிரதேச செயலாளருக்குக் கடிதம் அனுப்பிய நிலையில், முழுமையாக அக்காணிகள் பறிபோகும் என்ற அச்சம் நிலவும் சூழலில், யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் இந்தப் போராட்ட அழைப்பை விடுத்துள்ளது.

இதன் பிரகாரம் நாளை நவம்பர் மாதம் 2ஆம் திகதி இந்தப் போராட்டத்தை நடத்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஊடக சந்திப்பில் மாணவர் ஒன்றியத் தலைவர் அ.விஜயகுமார், செயலாளர் எஸ்.றாபின், கலைப்பீட தலைவர் சி.ஜெல்சின் ஆகியோர் கலந்துகொண்டனர்.

☞2

# இரட்டைக் குடியுரிமையுடன் எம்.பிக்கள் எவரும் இல்லை

## குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவிப்பு




**இரட்டைக் குடியுரிமை தொடர்பான விசாரணைகள் நேற்று நிறைவடைய இருந்ததாகவும், இதுவரை இடம்பெற்ற விசாரணைகளில் இரட்டைக் குடியுரிமை கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் அடையாளம் காணப்படவில்லை எனவும் குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.**

☞2

# பணவீக்கம் சற்று வீழ்ச்சி

**ஒக்டோபர் மாதத்திற்கான பணவீக்கம் 66 வீதமாகக் குறைந்துள்ளதாக மக்கள் தொகை மற்றும் புள்ளி விவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

**செப்டம்பர் மாதத்தில் பணவீக்கம் 69.8 வீதமாகப் பதிவாகியிருந்தது. அதிலேயே சற்று வீழ்ச்சி காணப்பட்டுள்ளது.**

**இதற்கிடையில், ஒக்டோபர் மாதத்தில் 94.9 வீதமாக இருந்த உணவுப் பணவீக்கம் செப்டம்பர் மாதத்தில் 85.6 வீதமாகக் குறைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.**

# இன்று அல்லது நாளை திரும்பவும் எரிபொருள்களின் விலை குறையும்?



நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைக்கு மத்தியில் இன்று அல்லது நாளை எரிபொருள் விலை சூத்திரத்தின் பிரகாரம் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு மாதமும் இரண்டு தடவைகள் எரிபொருள் விலையில் மாற்றங்களை அறிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார்.

☞2

# 4 நாள்கள் பயணமாக ரணில் ஞாயிறன்று எகிப்து புறப்பாடு

நான்கு நாள்கள் உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 06ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எகிப்து பயணமாகவுள்ளார்.


நவம்பர் 06ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை அங்கு நடைபெறவுள்ள காலநிலை மாற்றம் குறித்த மாநாட்டில் உரையாற்றுவதற்காக ஜனாதிபதி அங்கு செல்கின்றார்.

☞2



# ரயிலில் மோதிய நிலையில் சடலம் கனகராயன்குளம் பகுதியில் மீட்பு!

## கொலையா? தற்கொலையா? விபத்தா?



வவுனியா,நவ.01

வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் ரயிலில் மோதிய நிலையில் ஆண் ஒருவரின்

☞2

# போதைப் பொருளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை குறித்து வடக்கில் கூட்டம்



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம்,நவ.01

வடக்கில் போதைப்பொருளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் பங்குபற்றலோடு

☞11

# பதுளை விபத்தில் மூளைச் சாவடைந்தவர் அங்கிருந்து உறுப்புகள் தானத்துக்காகக் ஹெலியில் கொழும்புக்கு!

## இதயம், நுரையீரல், கல்லீரல், சிறுநீரகங்கள் வேறு நோயாளிகளுக்கு





கொழும்பு,நவ.01

மூளை சாவடைந்த நபர் ஒருவரின் உடல் உறுப்புகள் தானம் செய்வதற்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு நேற்று எடுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

வாகன விபத்துக்கு உள்ளாகி பதுளை வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மூளை சாவடைந்த நபரின் உடல் உறுப்புகளே குடும்பத்தினரின் அனுமதியுடன் தானம் செய்யப்படுகின்றது.

இந்நிலையில், மூளை சாவடைந்தவரை விமானம் மூலம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதாக வைத்தியசாலையின் பிரதான மருத்துவர்

☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிள்ளையார் கல்யாணம் நாளை, நாளை என்று தள்ளிப் போவதாக ஒரு ஐதீகப் பேச்சு உண்டு.

அதைப்போல ஒத்திப்போடப்படும் இரண்டு விடயங்கள் இப்போது வடக்கில் உள்ளன என்கிறார் எனது தொலைபேசி நண்பர் ஒருவர்.

ஒன்று - சர்வதேச விமானப் போக்கு வரத்துக்குப் பலாலி விமான நிலையம் திறக்கப்படுவது.

மற்றது - இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு நடைபெறுவது.

இரண்டுமே நாளைக்கு, நாளைக்கு என்று தள்ளிப் போய்க் கொண்டிருக்கின்றமை வாஸ்தவம்தான்.

பலாலி விமான சேவை விரைவில் மீண்டும் ஆரம்பமானாலும் ஆரம்பமாகலாம்.

ஆனால், இலங்கைத் தமிழரசுக் கட்சி மாநாடு மட்டும் இப்போதைக்கு நடைபெறும் என்று எனக்கு நம்பிக்கை இல்லை.

கட்சியின் 14 ஆவது தேசிய மாநாடு 2012 மே 27 மட்டக்களப்பில் நடைபெற்றது. இரா.சம்பந்தன் தலைவராகப் பொறுப்பேற்றார்.

அவர் அடுத்த மாநாட்டை - 15 ஆவது தேசிய மாநாட்டை - இரண்டு ஆண்டுகளில், 2014 செப்டம்பர் 05, 06, 07 ஆம் திகதிகளில் வவுனியாவில் நடத்தினார். அங்கு வைத்துத் தலைமைப் பொறுப்பை மாவை சோ.சேனாதிராசா ஏற்று கொண்டார்.

மீண்டும் கட்சிக்குக் கெட்ட காலம் பிடித்துக் கொண்டது. ஐந்து வருடங்கள் கழித்துத்தான் 16 ஆவது தேசிய மாநாட்டை 2019 ஜூன் 28,29,30 ஆம் திகதிகளில் மாவை கூட்டினார்.

இப்போது அந்த மாநாடு முடிவடைந்தும் மூன்று ஆண்டுகள் கழிந்து விட்டன. ஆனால் அடுத்த மாநாடு நடப்பதாக இல்லை. பிள்ளையார் கல்யாணம் மாதிரி அடுத்த மாதம், அடுத்த மாதம் என்று அடுத்த மாநாடு தள்ளிப் போய்க் கொண்டே இருக்கின்றது.

மாநாட்டை கூட்டினால் தலைமை பதவியும் போய்விடும், எம்.பி. பதவியையும் இழந்த நிலையில் கட்சித் தலைமைப் பதவியும் இல்லாவிட்டால் வீட்டிலிருந்து ஈ ஓட்டுவதா என்ற கவலை - ஆதங்கம் - மாவையருக்கு.

அதனால் திருநாளைப் போவார் மாதிரி மாநாடு குறித்து நாளை, நாளை என்று கதை விட்டுக் கொண்டிருக்கின்றார் அவர்.

தமிழரசுக் கட்சியை தந்தை செல்வா தொடங்கியது 1949 து டிசம்பர் 18ஆம் திகதி ஆகும். அந்தத் தினத்தில் இம்முறை மாநாட்டை நடத்த வேண்டும் என்று கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள் கட்சியின் கடைசி செயற்குழு கூட்டத்திலும் வலியுறுத்தினர். ஓம், ஓம் என்று தலை அசைத்தார் கட்சித் தலைவர் மாவையர்.

ஆனாலும், விடயம் நடப்பதாக தெரியவில்லை. கட்சியின் மூலக்கிளை, தொகுதி கிளைகள் கூடிப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தால்தான் தேசிய மாநாட்டை நடத்தலாம்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முதல் தொகுதி கிளையின் கூட்டம் நேற்று முன் தினம்தான் நடந்திருக்கின்றது. அது நல்லூர் தொகுதிக் கிளை.

பிற இடங்களில் இந்தக் கூட்டங்கள் நடைபெற்று, அதன்பின் கட்சி மாநாடு என்றால் இந்த ஆண்டு இறுதியிலும் அது நடக்கும் என்று நம்பிக்கை - சாத்தியம் - இல்லை. இனி அடுத்த ஆண்டுதான்.

அதுவரை, தமிழரசுத் தலைமை பறிபோகாமல், தம்வசம் இருக்கும் என்பதில் மாவையர் மகிழலாம்.

அதேசமயம், கட்சிக்குள் இழுபறிகள், போட்டிகள், சூடு பிடிக்கின்றன. ஸ்ரீதரன் எதிர் சுமந்திரன் முரண்பாடு முற்றியுள்ளது. இந்த முரண்பாடுகளினால் அடுத்த புதிய தலைவர் ஒருவரை ஏகமனதாகத் தேர்ந்தெடுப்பதற்கான சாத்தியங்கள் அருகி வருவதாக மாவை தரப்பு நம்புகின்றது. அப்படி ஒருவரை தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்ய முடியாத நிலையில், போட்டியைத் தவிர்ப்பதற்காக தலைமை பதவி தன்னிடமே தொடர்ந்து விட்டுவிடப்படும் என்ற நப்பாசையில் இருக்கிறார் மாவையர் என்கின்றன உள் வீட்டு வட்டாரங்கள்.

இதே சமயம், தமிழ் ஊடகம் ஒன்றை சர்வதேச மட்டத்தில் நடத்தும் வர்த்தகர் ஒருவர் அண்மைக் காலமாக மாவையருடனும் அவர் அணியுடனும் மிக நெருங்கி வருகின்றார். அந்த வர்த்தகரின் அனுசரணையில் பல நிகழ்வுகள் கட்சியை ஒட்டி நடக்கின்றன. அண்மையில் கூட அரங்கேறி இருந்தன. கட்சி வேலைகளுக்கும், அத்தோடு தமது பொக்கட்டுகளுக்கும் பணக் கட்டுகளை அளிக்கக்கூடிய - அளித்து வருகின்ற - வலுவான கை அது என்பதால் அதனை வலுவாகப் பற்றிக் கொண்டுள்ளது மாவையின் கை.

இனி நடக்கக்கூடிய தமிழரசுத் தேசிய மாநாட்டுக்கும் அந்த வர்த்தகரே முழு 'ஸ்பொன்ஸர்' என பேசப்படுகின்றது.

சுமந்திரனை வீழ்த்தும் திட்டத்தில் இருக்கும் அந்த வர்த்தகர் விட்டெறியக் கூடிய நோட்டில், தனது தலைமைத்துவம் தன்னிடம் இருந்து பிடுங்கப்படாமல் தன் கைவசம் மிஞ்சுமென்று மாவையர் நம்புகின்றார். நப்பாசை படுகின்றார்.

ஒரே ஒரு தேசிய மாநாட்டை நடத்தி, அதன் மூலம் எட்டு வருடங்களுக்கு மேல் கட்சித் தலைவராக இருக்கும் மாவை சேனாதிராசா தொடர்ந்து கட்சித் தலைமைப் பதவியை விட்டு விலகாமல் தொங்கிக்கொண்டு இருக்கிறார். எனக்கு என்னவோ அது தொடர்ந்து சாத்தியப்படும் விடயமாகத் தெரியவில்லை.

அவர் தலைவராக நீடிக்கும் வரை இப்போதைக்கு கட்சியின் தேசிய மாநாடு நடக்கும் என்றும் நான் நம்பவில்லை. பாவம்... தமிழரசு...!

**- மின்னல் -**

## பதுளை விபத்தில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில் -

ஹசலக மகாஹஸ்வெத்தும கிராமத்தில் வசித்து வந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 48 வயதான எம்.ஜீ. சந்திம என்பவரின் உடல் உறுப்புகளையே தானம் செய்ய உறவினர்கள் அனுமதி வழங்கியுள்ளனர். குடும்பத்தினரின் இந்த முடிவை பலரும் பாராட்டியுள்ளனர்.

ஹசலக பிரதேச சபையில் சாரதியாக தொழில் புரிந்து வந்த இந்த நபர், பணி முடிந்து பஸ்ஸில் வீடு திரும்பிக்கொண்டிருந்த போது, பஸ்ஸில் இருந்து விழுந்து விபத்துக்கு உள்ளாகியுள்ளார்.

தலையில் பலத்த காயம் ஏற்பட்டதன் காரணமாக முதலில் மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர், பின்னர் பதுளை வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் அவரது மூளை செயலிழந்து விட்டதால், அவரால் தொடர்ந்தும் உயிர் வாழ முடியாது என மருத்துவர்கள் குடும்பத்தினரிடம் தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் அவரை மரணத்தில் இருந்து காப்பாற்ற முடியாது என்றால், அவரது உடல் உறுப்புகளை தானம் செய்ய மனைவியும் பிள்ளைகளும் தீர்மானித்து, அதனை மருத்துவர்களிடம் தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனடிப்படையில், பதுளை வைத்தியசாலையில் மருத்துவர்கள் குழு, கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அறிவித்து, தேவையான நடவடிக்கைகளை தயார் செய்துள்ளனர்.

ஹெலி மூலம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ள மூளை சாவடைந்தவரின் இதயம், வெளிநாட்டு மருத்துவர்களின் உதவியுடன் வேறு நோயாளிக்கு பொருத்தப்பட உள்ளது.

நுரையீரல் மற்றும் கல்லீரல் கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளிக்கும், சிறுநீரகங்கள் பதுளை வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் இரண்டு நோயாளிகளுக்கும் பொருத்தப் படவுள்ளன.

பதுளை வைத்தியசாலையில் இருந்து கொண்டு செல்லப்பட்ட மூளை சாவடைந்தவரின் உடலில் இருந்து உறுப்புகள் எடுக்கப்பட்ட பின்னர், உடலை பதுளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று மரண விசாரணைகளை நடத்திய பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட உள்ளதாகவும் பதுளை வைத்தியசாலையின் பிரதான மருத்துவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வலி. வடக்குக் காணி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன் பொழுது கருத்து தெரிவித்த மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் -

எமது மக்களுக்காகவும் உரிமைகளுக்காகவும் இனத்திற்காகவும் போராட்டம் ஒன்றிற்கான அழைப்பை விடுக்கின்றோம். கடந்த மாதம் காணி சுவீகரிப்பு தொடர்பாக காணி அமைச்சின் மேலதிக செயலாளர் தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். குறிப்பாக வடக்குக் கிழக்கில் காணி சுவீகரிப்புக்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற வண்ணமே உள்ளது.

இது தடுத்து நிறுத்தப்படவேண்டும் அந்தவகையில் வலி வடக்கு காணிகளை விடுவிக்க வலியுறுத்தி புதன்கிழமை காலை 10 மணியளவில் எமது யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே தமிழர்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து பயணித்துக்கொண்டிருக்கூடிய மதகுருமார், சிவில் அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரையும் கட்சி பேதமின்றி பங்கெடுக்குமாறு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுக்கிறது. - என்று தெரிவித்தனர்.

## இரட்டைக் குடியுரிமை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடந்த வாரம், குடிவரவுத் திணைக்களம், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து எம்.பி.க்களின் பிறந்த திகதி மற்றும் தேசிய அடையாள எண்களை நாடாளுமன்றப் பொதுச் செயலாளரிடம் இருந்து பெற்று, அதனடிப்படையில் இரட்டைக் குடியுரிமை தொடர்பான விசாரணைகளைத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது .

## 4 நாள்கள் பயணமாக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த பயணத்தின்போது எகிப்பு ஜனாதிபதி உள்ளிட்ட அந்நாட்டில் உயர் மட்ட தலைவர்களுடன் ஜனாதிபதி ரணில் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த விஜயத்தை முடித்துக்கொண்டு எதிர்வரும் 10 ஆம் திகதி ஜனாதிபதி நாடு திரும்புவார்.

## இன்று அல்லது நாளை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதன்படி ஒவ்வொரு மாதமும் முதலாம் மற்றும் 15ஆம் திகதிகளில் எரிபொருள்களின் விலையில் மாற்றங்களை அறிவிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே எரிபொருள் விலையில் இன்று அல்லது நாளை மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. எரிபொருள் விலை குறைய வாய்ப்புள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ரயிலில் மோதிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சடலம் மீட்கப்பட்டுள்ளது.

யாழில் இருந்து நேற்றுக் காலை கொழும்பு நோக்கிச் சென்ற ரயில் கனகராயன்குளம் பகுதியில் பயணித்த போது ரயில் பாதையில் ஆண் ஒருவருடன் மோதி விபத்துக்குள்ளானது. விபத்து இடம்பெற்ற நிலையில் தலை, கைகள், கால்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ரயில்வேத் திணைக்களத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து சடலத்தை மீட்டு கனகராயன்குளம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

(11ஆம் பக்கம் பார்க்க)



# இன்னும் ஆறு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன

# அமெரிக்க லொத்தர் விசா

## நீங்களும் அமெரிக்காவில் குடும்பத்துடன் வாழலாம்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!






அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு உட்பட இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

**மிக மிக அரிய சந்தர்ப்பம் தவறவே விடாதீர்கள்**

**அலட்சியம் வேண்டாம்**

கடந்த காலங்களில் வாய்ப்புக்களை தவறவிட்டு விண்ணப்பிக்காதவர்கள் அப்படியே இருக்க **நம்பிக்கையுடன்** எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

ஆச்சரியம்! ஆனால் உண்மை.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

அனைவருக்குமான இலவச சந்தர்ப்பம்

திருமணமானவர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு வாய்ப்புக்கள்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில் வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் இது அரிய இறுதி சந்தர்ப்பமாகும். பயன்படுத்துங்கள்! பலன் பெறுங்கள்!

240 இதுவரை எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் 240 பேருக்கு மேல் அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

இலட்சக்கணக்கான காசை கொடுத்து **ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 55'000 பேருக்கான அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?**

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

Love You

**0768226244**

**0768226240**

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

## பதிவுகளுக்கு Passport தேவையில்லை

முக்கிய அறிவித்தல்

ஒருவிதத்தில் நாம் அனைவரும் அதிஷ்டசாலிகள்தான் கடந்த வருடங்களில் கட்டாயமாக்கப்பட்ட பாஸ்போட் நடைமுறை இந்த வருடம் தளர்த்தப்பட்டுள்ளது.இதன்மூலம் இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் பாஸ்போட் இல்லாமலேயே விசா வாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

கடைசி 7 நாட்களும் உலகம் முழுவதிலுமிருந்து அதிக விண்ணப்பங்கள் போடப்படுவதால் அமெரிக்க லொத்தர் இணையமானது அடிக்கடி முடங்குவதால் இறுதிக்கட்ட ஏமாற்றங்களை தவிர்க்க, முடிந்தளவுக்கு முன்னரே பதியுங்கள்.

**விண்ணப்ப முடிவு திகதி - 08-11-2022**

EMERGENCY ALERT சிந்தியுங்கள்!!! உடனடியாக பதிவுசெய்யுங்கள்!

## பதிவுகள் நடைபெறும் எமது கிளைகள்-விபரங்களுக்கு அழையுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | -0777068777 | திருகோணமலை | - 0768226237 | கிளிநொச்சி | -0768226240 |
| நெல்லியடி | -0776699892 | கொடிகாமம் | - 0764550675 | சாவகச்சேரி | -0768226242 |
| புதுக்குடியிருப்பு | -0764550673 | சுன்னாகம் | - 0764550670 | மானிப்பாய் | -0768226238 |
| கோப்பாய் - | -0768226238 | புத்தூர் | - 0764550671 | பருத்தித்துறை | -0768226230 |
| வல்வெட்டித்துறை | -0776697960 | பண்டத்தரிப்பு | - 0777718322 | சங்கானை | -0777726322 |

கொழும்பு (வெள்ளவத்தை) - 0777469777

வெளிமாவட்டங்கள்- 0768226236

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை

**யுத்தம் முடிந்து 13 ஆண்டுகள் கடந்தும், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் தீர்க்கப்படாத பிரச்சினையாக நீடித்து வருகின்றது.**

**அந்தப் பிரச்சினைக்குள் புதைந்து கிடக்கும் அர்த்த பரிமாணங்களைப் புரிந்து கொள்ளாமல், அவற்றை மூடி மறைத்து, சமாளிக்கலாம் என்று தொடர்ந்து வந்த சிங்களப் பேரினவாதப் போக்கு அரசுகள் எல்லாம் அபத்தமாக நம்பின. அதற்கு ரணிலின் இந்த அரசும் விதிவிலக்கல்ல.**

**இந்தப் பிரச்சினையில் பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு நஷ்ட ஈடுகள், பிற உதவிகள், நிவாரணங்கள் வழங்கி, அத்தரப்புகளைத் தாஜா பண்ணி விடலாம் என்று சிங்களத் தலைமைகள் தப்புக் கணக்குப் போடுகின்றன.**

**தங்களின் உயிருக்கு நிகரான உறவுகளைத் தொலைத்த மக்கள் கூட்டத்தின் உணர்வுகளையும் இழப்புக்களையும் வெறும் பணத்தாலும், இழப்பீட்டாலும் சமாளித்து, ஈடு செய்து விடலாம் என்று கட்டப்படும் பிழையான கருத்தாக்கங்களே இவ்விடயத்தில் தீர்க்க முடியாத சிக்கலுக்கு அடிப்படையாகும்.**

**இந்த விவகாரத்தில் பாதிக்கப்பட்ட தரப்புகளின் நீதி, நியாயமான எதிர்பார்ப்பு யாது என்பதை ஆட்சி தரப்பு புரிந்து கொள்ளாவிட்டால், இந்த விவகாரம் தீர்க்கப்பட முடியாத சிக்கலாக நீடிப்பது தவிர்க்க முடியாதது.**

**பாதிக்கப்பட்ட உறவுகளின் நியாயமான எதிர்பார்ப்பு யாது என்பது, மாறி மாறி அதிகாரத்துக்கு வந்த பௌத்த, சிங்களப் பேரினவாத அரசுகளுக்கு நன்கு தெரியும்.**

**அவர்களுக்கு நீதி செய்யப் போனால் – நியாயமாக நடந்து கொள்ள இணங்கினால் – தமது உண்மை சொரூபம், பேரினவாதக் கொடூர முகம் அம்பலமாகி விடும் என்ற உண்மையான அச்சம் பௌத்த, சிங்களப் பேரினவாத அரசுகளுக்கு.**

**அதனால்தான் அவை பாதிக்கப்பட்ட அந்த மக்களின் நீதியான எதிர்பார்ப்புகள் தமக்குத் தெரியாதவை என்ற மாதிரி வேடம் போடுகின்றன.**

**வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது, அதற்கு யார் பொறுப்பு, ஏன் அப்படி ஆயிற்று என்பவை தொடர்பில் நீதி விசாரணை நடத்தப்பட்டு, உண்மைகள் கண்டறியப்பட்டு, பகிரங்கப்படுத்தப்பட வேண்டும், குற்றம் இழைத்தோர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும், பொறுப்பு கூறல் நிலை நிறுத்தப்பட வேண்டும், அதன் மூலம் மீள நிகழாமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவற்றின் பின்னர்தான் நஷ்ட ஈடும், பிற விடயங்களும் என்பதே வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் ஒரே நிலைப்பாடு.**

**இது புரியாதமை போல நடிக்கின்றன மாறி, மாறி அதிகாரத்துக்கு வந்த அரசுகள்.**

**வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் நீதி விசாரணை நடத்தி, உண்மைகளைக் கண்டறிவதைத் தவிர, மற்ற விடயங்களைச் செய்ய மட்டுமே பௌத்த, சிங்கள அரசுகள் இணங்கி வருகின்றன.**

**இந்தப் பின்புலத்தில் இந்தப் பிரச்சினைக்கு இணக்கமான தீர்வு வருவதற்கான சாத்தியங்கள் இல்லவே இல்லை என்பதுதான் உண்மை.**

**காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் நடந்த உண்மைகளைக் கண்டறிய இணங்காத வரை தீர்வு கிட்ட போவதில்லை. இது நிச்சயம்.**

# பொதுஜன பெரமுன கட்சியின் அழுத்தங்களால் ஜனாதிபதி சரியாகப் பயணிக்க முடியாத நிலை!

### மைத்திரிபால சிறிசேன சாடல்



எதிர்வரும் தேர்தலில் பரந்த கூட்டணியுடன் இணைந்து போட்டியிடவுள்ளதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இலங்கை மகளிர் சங்கம் மற்றும் இலங்கை இளைஞர் சங்கம் ஆகியவற்றின் பொதுச் சபைக் கூட்டங்களின் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் பொதுஜன பெரமுன கட்சியின் அழுத்தங்களுக்கு ஜனாதிபதி உள்ளாகி சரியாகச் பயணிக்க முடியாத நிலையில் உள்ளார் எனவும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

# மக்கள் போராட்டத்துக்கு 43 ஆம் படையணி ஆதரவு!



நாளை (புதன்கிழமை) மேற்கொள்ளப்படவுள்ள போராட்டத்துக்கு பூரண ஆதரவை வழங்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவின் 43 ஆம் படையணி தீர்மானித்துள்ளது.

ஜோசப் ஸ்டாலின் மற்றும் இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் பிரதிநிதிகள் குழுவினருடன் தலைமையகத்தில் நடத் திய கலந்துரையாடலின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வசந்த முதலிகே மற்றும் சிறிதம்ம தேரர் ஆகியோர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 90 நாள்களுக்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மேலும் தொடர்ச்சியான பொலிஸ் அடக்குமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன என்றும் அரசாங்கம் தவறாகப் பயன்படுத்துகிறது என்றும் குற்றம் சாட்டியுள்ளார். எனவே பயங்கரவாதத் தடைச் சட்டத் துக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

# போதைப்பொருளைக் கட்டுப்படுத்த வடக்கில் அணி உருவாக்கப்படுமாம்!

### *நீதி அமைச்சர் விஜயதாஸ யாழில் வைத்து உறுதி*



வடபகுதியில் போதைப்பொருளின் அதிகரித்த பாவனை தொடர்பில் அதனை கட்டுப்படுத்துவதற்காக ஓர் அணியை உருவாக்கி செயல்படுத்தவுள்ளோம் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இரண்டாம் மொழி கற்கை மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்திற்கு பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

குறிப்பாக வடக்கு மாகாணத்தில் உள்ள இளைஞர்கள் அதிகளவில் இந்த போதைப் பொருளுக்கு அடிமையாகி உள்ளனர் என எமக்குத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதனைக் கட்டுப்படுத்தும் முகமாக ஓர் அணி ஒன்றை உருவாக்கி அதன் மூலம் வடபகுதியில் எவ்வாறு போதைப்பொருள் விநியோகிக்கப்படுகின்றது அல்லது இந்தப் போதைப் பொருளை விநியோகிப்பவர்கள் யார்?

அவர்களுக்கு எவ்வாறு போதைப் பொருள் கிடைக்கின்றது, எங்கிருந்து வடபகுதிக்கு போதைப்பொருள் கொண்டுவரப்படுகின்றது போன்ற விடயங்கள் தொடர்பில் ஆராய வேண்டியுள்ளது.

வடபகுதியில் அதிகரித்துள்ள போதைப் பொருள் பிரச்சினை தொடர்பில் வடமாகாண ஆளுநர் தலைமையில் முப்படையினர் மற்றும் பொலிஸார்,அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலர்கள் ஆகியோர் இணைந்து ஓர் அணியொன்றை உருவாக்கி வடபகுதியில் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான விசேட கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்து போதைப் பொருள் பாவனையை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பது தொடர்பில் ஆராயவுள்ளோம். – என்றார்.



# அதிகாரிகளின் பொய்யான தகவல்களினால் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் பாதிப்பு!

## இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனம் தெரிவிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஒக்.30

மாவட்ட அதிகாரிகளின் பொய்யான தகவல்களால் உலக உணவு விவசாய நிறுவனத்தால் வழங்கப்படும் விவசாயிகளுக்கான தொகை கிடைக்காத நிலையில் கிளிநொச்சி விவசாயிகள் உள்ளனர் என இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளன செயலாளர் மு.சிவமோகன் குற்றம் சாட்டினார்.

சம்மேளன விவசாயிகள் நடாத்திய ஊடக சந்திப்பிலேயே இந்த விடயத்தை அவர் தெரிவித்தார்.

இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளன செயலாளர் முத்து சிவமோகன் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

உலக உணவு விவசாய நிறுவனத்தால பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஓர் அந்தர் அசேதன உரமும் 15 ஆயிரம் ரூபா நிதி வடமாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டம் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களில் வழங்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி மாவட்டத்துக்கு வழங்கப்படாத காரணத்தை உரிய நிறுவனத்திடம் கேட்டபோது கிளிநொச்சி மாவட்ட செயலகத் தரவுகளின் படி விவசாயிகள் ஆரோக்கியமான நிலையில் உள்ளனர் எனவும் கடந்த போகத்தில் அதிக விலைச்சலை பெற்றிருந்தனர் எனவும் தகவல் தரப்பட்ட நிலையிலே மேற்படி தொகை மாவட்டத்திற்கு நிறுத்தப்பட்டதாக தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 70 ஆயிரத்துக்கு மேற்பட்ட வயல்நிலங்கள் உள்ளன 23 ஆயிரம் விவசாய குடும்பங்கள் உள்ள நிலையில் மேற்படி உதவி இன்மையால் 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட மிக வறுமை நிலையிலுள்ள விவசாயக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த மாவட்ட விவசாய குழு கூட்டங்களிலும் இந்த விடயத்தைச் சுட்டிகாட்டியிருந்தோம். அரசாங்க அதிபர் இந்த விடயத்தை மீளாய்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கவில்லை. கூட்ட அறிக்கையிலும் மேற்படி விடயம் திட்டமிட்டு வரவில்லை. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் கரிசனை கொண்டு வறிய விவசாயிகளைக் காப்பாற்ற உதவ வேண்டும் எனத் தெரிவித்தார்.

# மூன்று தினங்கள் தொடர்ந்து காயச்சல் நீடிக்குமானால் சிகிச்சை பெற வேண்டும்

## பதில் சுகாதார வைத்திய அதிகாரி அறிவுறுத்து

மூன்று தினங்கள் தொடர்ந்து காயச்சல் நீடிக்குமானால் சிகிச்சைபெற்றுக்கொள்ளுமாறு களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பதில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஞானராஜா சஞ்ஜய் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது பெரியகல்லாறு கரையோரப்பகுதிகள் தூய்மைபடுத்தப்பட்டதுடன் நுளம்பு பெருகும் வகையிலிருந்த இடங்களும் தூய்மைப்படுத்தப்பட்டதோடு களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட அனைத்து கரையோரப்பகுதிகளிலும் இந்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை தற்போது மழையுடன் கூடிய காலநிலை ஏற்பட்டுள்ளதன் காரணமாக டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத மதுபான தொழில் 300 வீதத்தால் வளர்ச்சியடைவு!

இலங்கையின் சட்டவிரோத மதுபானத் தொழில் சமீப காலங்களில் 300 வீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது.

இந்த சட்டவிரோத மதுபானங்கள் அனைத்தும் உரிமம் பெற்ற மதுபான ஆலைகளுக்குள் தயாரிக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

# குஜராத்தில் தொங்குபாலம் இடிந்து வீழ்ந்ததில் விபத்து!

## ரணில் இரங்கல்



இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் தொங்கு பாலம் இடிந்து விழுந்ததில் உயிரிழந்த மக்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரங்கல் செய்தியை வெளியிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்துக்கும் அந்நாட்டு மக்களுக்கும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் தனது இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையர் பிரார்த்திப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

குஜராத்தின் மோர்பி பகுதியில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தொங்கு பாலம் இடிந்து விழுந்ததில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் யாழ்.செயலகத்துக்குள் நுழைந்து போராட்டம்




யாழ்.மாவட்ட செயலகத்துக்குள் நுழைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

முன்னதாக யாழ் மாவட்ட செயலகத்துக்கு முன்னால் கொட்டும் மழைக்கு மத்தியிலும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டநிலையிலேயே மாவட்ட செயலகத்துக்குள் உள் நுழைந்தனர்.

இந்தியாவிலிருந்து திரும்பி வந்த இலங்கையர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கான நடமாடும் சேவை நேற்று (திங்கட்கிழமை) யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது நீதி மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கலந்துகொண்ட நிலையில் அவரது வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் வேண்டாம், சர்வதேச நீதி விசாரணையை மட்டுமே நாங்கள் கோருகிறோம், இரண்டு லட்சம் லஞ்சம் வேண்டாம், நீதி அமைச்சரே வெளியேறு, விஜயதாஸ ராஜபக்ஷவே வெளியேறு எனக் கோம் எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# சட்ட விரோத கடல் அட்டைப் பண்ணைகளை கட்டுப்படுத்தும் அதிகாரிகளே வாய்திறவுங்கள்!

## வடமாகாண கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் அ.அன்னராசா கோரிக்கை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.01

உரிய ஆய்வுகளும் சட்ட ரீதியான பணிகளும் இன்றி இடம்பெறும் சட்ட விரோத கடல் அட்டைப் பண்ணைகளை கட்டுப்படுத்த வேண்டிய மாவட்ட அதிகாரிகளே வாய்திறவுங்கள் என வடக்கு மாகாண கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் அ.அன்னராசா தெரிவித்தார்.

கடல் அட்டை வளர்ப்பும் யாழ்ப்பாண தீவக கடல்களின் அரசியலும் சூழலியலும் என்னும் நூல் வெளியீடு கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் நூலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது தலைமை உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் –

நாரா தனது ஆய்வு அறிக்கையில் செய்ய முடியாது எனத் தெரிவித்த முடிவுகளை 3 ஆண்டுகளில் மாற்றி குறிப்பிட்டளவு செய்யலாம் என்கின்றனரே இதன் அடிப்படையில் நாராவும் நெக்டாவும் அமைகின்றது என்று கேள்வி எழுப்புகின்றேன்.

பருத்தித்தீவிலே 3.47 ஏக்கர் எம் நாட்டவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மிகுதி 46 ஏக்கரும் எந்த நாட்டவருக்கு அனுமதி வழங்கியுள்ளீர்கள் என்பதே தெரியவில்லை. அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் ஏன் தயங்குகின்றார்கள்?

இன்று அத்துமீறிய கடல் அட்டைப் பண்ணைகளுக்கு எதிராக நாம் மனித உரிமை ஆணைக்குழுவை நாடியுள்ளோம். அதன் விசாரணையிலே கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் கூறினார் தாம் இரு பண்ணைகளுக்கு மட்டுமே சிபார்சு வழங்கியதாகவும் ஆனால் மாவட்டத்திலே 400 பண்ணைகள் இருக்கின்றன எனவும் கூறுகின்றார்.

வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்கும் போலியான வாக்குறுதிகள் மூலம் முதலாளித்துவத்தை வளர்க்க முயல்வதோடு பாரம்பரியத்தை அழித்து எமது நாட்டு மக்களின் உணவு முறை அல்லாத தொழிலை வேறு நாட்டவனுக்காக வளர்த்து விட்டு எம்மிடையே பிரிவினையை வளர்த்துவிட முயல்கின்றனர். அதிகாரிகள் கதிரைக்குப் பயந்து மாவட்டத்தின் இயற்கை வளத்தை அழிக்க உறுதுணையாக இருக்கக் கூடாது. – என்றார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மனிதனை விண்வெளிப் பயணத்திற்கு அனுப்பும் இந்தியாவின் ‘ககன்யான்’ திட்டம் தயாராகிறது!

## முதல் பரீட்சார்த்தப் பயணம் பெப்ரவரியில் ஆரம்பம்

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் அல்லது ‘இஸ்ரோ’ அடுத்த ஆண்டு பெப்ரவரி தொடக்கம் இந்தியாவின் முதல் மனித விண்வெளிப் பயணத்திற்கான தொடர்ச்சியான சோதனை விமானங்களைத் தொடங்கும் என்று மூத்த அதிகாரி ஒருவர் ‘பிரஸ் டிரஸ்ட் ஒவ் இந்தியா’விடம் தெரிவித்தார்.

ககன்யான் மனித விண்வெளிப் பயணத்தின் ஒரு பகுதியாக விண்வெளி வீரர்களை மூன்று நாள்களுக்கு சுற்றுப்பாதையில் கொண்டு செல்லும் ஹெவி லிஃப்ட் சினூக் ஹெலிக்கொப்டர் மற்றும் சி – 17 குளோப்மாஸ்டர் போக்குவரத்து விமானம் ஆகியவற்றை சோதனைக்கு அனுப்பவும் விண்வெளி நிறுவனம் திட்டமிட்டுள்ளது என இஸ்ரோவின் மனித விண்வெளி விமானமையத்தின் இயக்குநர் ஆர்.உமாமகேஷ்வரன் தெரிவித்தார்.

புதுடில்லியில் இந்திய விண்வெளி காங்கிரஸில் உரையாற்றிய அவர், இஸ்ரோவின் விஞ்ஞானிகள் சுற்றுச்சூழல் கட்டுப்பாட்டு அமைப்பின் வடிவமைப்பை முடித்துள்ளனர், இது விண்வெளி வீரர்கள் பூமியைச்










சுற்றி வரும்போது குழு சேவை தொகுதியில் சுற்றுப்புற வாழ்க்கை நிலைமைகளை உறுதி செய்யும் என்றார்.


அடுத்த ஆண்டு டிசம்பரில் ஆளில்லா விண்வெளிப் பயணத்தை மேற்கொள்வதற்கு முன், குறைந்தது 17 வெவ்வேறு சோதனைகளை இஸ்ரோ அடுத்த ஆண்டு திட்டமிடுகிறது.

கொலனித்துவ ஆட்சியில் இருந்து நாடு சுதந்திரமடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், 2022 ஆம் ஆண்டில் அதை அடைவதற்கான தற்காலிக இலக்குடன், 2018 ஆம் ஆண்டு தனது சுதந்திர தின உரையில் பிரதமர் நரேந்திர மோடி ககன்யான் திட்டத்தை அறிவித்தார்.

இருப்பினும், கொவிட் தொற்றுநோய் பல தாமதங்களுக்கு வழிவகுத்தது. அதனாலும் மற்றும் காரணங்களாலும் முதல் இந்திய விண்வெளி வீரர்கள் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் அல்லது 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தங்கள் முதல் விண்வெளிப் பயணத்தை மேற்கொள்வார்கள்.

‘ஸ்பேஸ் கேப்ஸ்யூலுக்கு’ வெளியே வெப்பநிலை 2000 டிகிரி செல்சியஸுக்கு மேல் இருக்கும் போது, விண்வெளி வீரர்கள் மறு நுழைவு கட்டத்தில் கூட வசதியாக உணர வேண்டும் என்பதால், பணியாளர் தொகுதி மற்றும் சுற்றுச்சூழல் கட்டுப்பாட்டு அமைப்பை வடிவமைக்கும் பணி சவாலானது என்று உமாமகேஸ்வரன் கூறினார்.

விண்வெளி வீரர்கள் அமர்ந்து பறக்க வேண்டிய க்ரூ மாட்யூல் (விமானிகள் கட்டமைப்பு) முடிந்து, புனையமைப்பு பணி நடந்து வருகிறது. ஆறு மாதங்களுக்குள், பணியாளர் தொகுதியை நாங்கள் பெறுவோம் என்று சாட்காம் இண்டஸ்ட்ரி அசோசியேன் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் அவர் கூறினார்.




சுற்றுச்சூழல் கட்டுப்பாட்டு அமைப்பு, பணியாளர் தொகுதியில் சுற்றுப்புற வாழ்க்கை நிலைமைகளை வழங்குவதால், திட்டத்தின் ஒரு முக்கிய அங்கமாகும் உமாமகேஸ்வரன் கூறினார்.

நாம் ஒக்ஸிஜனை வழங்க வேண்டும். கார்பன் டை ஒக்சைட்டை அகற்ற வேண்டும். ஈரப்பதத்தை அகற்ற வேண்டும். வெப்பநிலையை பராமரிக்க வேண்டும். மேலும் தீ ஆபத்து இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். இது எந்த நாடும் நமக்கு வழங்காத மிகவும் சிக்கலான தொழில்நுட்பமாகும் – என்று அவர் கூறினார்.

சுற்றுச்சூழல் கட்டுப்பாட்டு அமைப்பை உள்நாட்டிலேயே சுய உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மூத்த விஞ்ஞானி கூறினார்.

“எங்களிடம் வடிவமைக்கும் திறன் உள்ளது. எனவே நாங்கள் அதைச் செய்கிறோம். அதற்கு சிறிது காலம் எடுக்கும். நாங்கள் அனைத்து வடிவமைப்பையும் முடித்துவிட்டோம். இப்போது வடிவமைக்கப்பட்டது பாதுகாப்பானது என்பதை நிரூபிக்க வேண்டிய முயற்சிக்குரியநேரம் இது. –என்றார்உமாமகேஸ்வரன்.




விண்வெளிப் பயணத்தை மேற்கொள்வதற்காக நான்கு விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் ரஷ்யாவில் ஆரம்பப் பயிற்சியை ஏற்கனவே முடித்துள்ளனர் என்றார்.

தேர்வு செய்யப்பட்ட விண்வெளி வீரர்கள் தற்போது பெங்களூருவில் உள்ள விண்வெளி வீரர் பயிற்சி நிலையத்தில் மேற்கொண்டு பயிற்சி பெற்று வருகின்றனர்.

(மூலம்:என்.டி.ரி.வி.)

காலைக்கதிர்
Kalaikkathir

# பெருந்தோட்டக் காணிகளை பகிர்ந்தளிக்கும் யோசனை தேர்தல் கால வாக்குறுதி மட்டுமே!

## சிலோன் தோட்ட அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் தயால் குமாரகே தெரிவிப்பு

பெருந்தோட்டக் காணிகளை பகிர்ந்தளிக்கும் யோசனை தேர்தல் கால வாக்குறுதி மட்டுமே என்றும் அந்த யோசனை அமுலுக்கு வராது என்றும் சிலோன் தோட்ட அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் தயால் குமாரகே தெரிவித்தார்.

அவ்வாறு தோட்டக் காணிகளை பங்கீட்டால் அதுவே பெருந் தோட்டத் துறையின் அழிவின் ஆரம்பமாக அமையும் என்றும் அதனால் இந்தத் திட்டத்தை தாம் எதிர்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நுவரெலியா– ரதல்ல பகுதியில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, பெருந் தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உடைமையாளர்களாக்கும் திட்டம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உரம் விநியோகிக்கப்படும் என ஜனாதிபதி மற்றும் பெருந்தோட்டத்துறை அமைச்சர் ஆகியோர் அறிவிப்புகளை விடுத்து வந்தாலும், அதற்கான வேலைத் திட்டம் இன்னும் வகுக்கப்படவில்லை. அது தொடர்பில் எமக்கு தெளிவுபடுத்தவும் இல்லை. இது தாமதிக்கப்படுவதன் பின்னணியில் வேறு நோக்கம்கூட இருக்கலாம் என சந்தேகிக்கின்றோம்.

தோட்டங்கள் காடாகி வருகின்றன என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை நாமும் ஏற்கின்றோம். ஏனெனில் களை கொல்லி மற்றும் புற்களை அழிக்கக் கூடிய மருந்துகள் இல்லை.

தோட்டங்கள் காடாவதற்கு இதுவே காரணம். தோட்டங்கள் காடாகினால் கொழுந்து பறிக்க முடியாது. தற்போது 50 வீதமான தொழிலாளர்கள், இத்தொழிலில் இருந்து வெளியேறியுள்ளனர். இறப்பர் தொழிலாளர்களும் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர்.

பெருந்தோட்டக் காணிகளைப் பகிர்ந்தளிக்கும் யோசனை தோல்வி கண்ட பொறிமுறையாகும். பலரும் அது பற்றிக் கதைக்கின்றனர். ஆனால் பரீட்சாத்த நடவடிக்கைகூட தோல்வி கண்டுள்ளது. இதனை நாம் தேர்தல் கால வாக்குறுதியாகவே கருதுகின்றோம். அதனால் தான் இன்றளவில் நடைமுறைக்கு வராமல் உள்ளது.

தொழிலாளர்களுக்கு காணிகளைப் பங்கிட்டு வழங்கினால் அவர்கள் தேயிலை பயிரிடமாட்டார்கள். கிழங்கு, கரட் உள்ளிட்ட விவசாய உற்பத்திகளையே மேற்கொள்வார்கள். இதனால் தேயிலை ஏற்றுமதி பாதிக்கப்படும்.



குறிப்பாக பெருந்தோட்டத்துறையின் அழிவின் ஆரம்பமாகக்கூட இதனைப் பார்க்கலாம். பெருந்தோட்டத்துறையின் இருப்பைக் காக்க முடியாது என்பதே எமது மற்றும் தொழிலாளர்களின் கருத்தாகும். என்றார்.'

# தோட்ட தொழிலாளரை அப்படியே வைத்திருக்கவே முயற்சி: மலையக மக்களின் எதிர்காலத்தை நான் பொறுப்பேற்பேன்!

## சஜித் உத்தரவாதம்



மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் வழங்குவதற்கு ஆயிரம் நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. இது அடிமைத்தனத்தின் வெளிப்பாடாகும். இதற்கு முற்றுப்புள்ளி வைத்து, பெருந்தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்குவோம். மலையக மக்களின் எதிர்காலத்தை நான் பொறுப்பேற்பேன்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உத்தரவாதமளித்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலை மையகத் திறப்பு விழாவில் பிரதம அதிதி யாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே சஜித் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளராக்குவேன் என நான் கூறியபோது, அதற்கு எதிராக இனவாதப் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது. அவ்வாறானவர்களுக்கு மக்கள் நல்ல பாடம் புகட்டினர். இந்நாட்டில் இனவாதம், மதவாதத்துக்கு இடமளிக்கக் கூடாது. நாம் அனைவரும் இலங்கையர்களாகப் பயணிக்க வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா வழங்குவதற்கு ஆயிரம் நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. இத்தனை கிலோ கொழுந்து பறிக்க வேண்டும், அதிகளவு நேரம் வேலைசெய்ய வேண்டும் என்றெல்லாம் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. இது அடிமைத்தனமாகும். இந்த அடிமைத்தனத்துக்கு முடிவு கட்ட வேண்டும். அதற்காக ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியின்கீழ் தோட்டத் தொழிலாளர்கள் சிறுதோட்ட உரிமையாளர்களாக்கப்படுவார்கள்.

சிலர் தோட்டத் தொழிலாளர்களை அப்படியே வைத்திருக்கவே முற்படுகின்றனர். அதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். மலையகத்தில் கல்வி, சுகாதாரம் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும். வீடுகளும் நிர்மாணிக்கப்படும். எமது ஆட்சிக்கு பிறகு அடுத்த அரசுக்கு அதற்கான பணிகளை மிச்சம் வைக்கமாட்டோம். மலையக மக்களின் எதிர்காலத்தை நான் பொறுப்பேற்பேன். – என்றார்.

# சஜித்தை எதிர்த்துப் போட்டியிடுபவர்கள் மண்ணைக் கௌவுகின்றமை உறுதியாம்!

## உதயகுமார் எம்.பி. ஆருடம்



அடுத்த ஜனாதிபதித் தேர்தலின்போது சஜித் பிரேமதாஸவுக்கே தமிழ் முற்போக்கு கூட்டணி ஆதரவளிக்கும். சஜித்தை எதிர்த்துப் போட்டியிடுபவர்கள் மண்ணைக் கௌவுவது உறுதி என்று தொழிலாளர் தேசிய முன்னணியின் பிரதித் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம். உதயகுமார் தெரிவித்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைமை யகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

கொரோனா பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி போன்ற ஆபத்துகளின்போது இந்தியாவே எமக்குக் கை கொடுத்தது. ஆபத்துக்கு உதவும் உண்மையான நண்பன் இந்தியா என்பதை மறந்துவிடக்கூடாது.

இலங்கையை பாதாளத்துக்குள் தள்ளிவிட்டு கோட்டாபய ராஜபக்ஸ நாட்டைவிட்டு ஓடினார். அதன்பின்னர் மக்களின் வாக்குகளால் நாடாளுமன்றம் வர முடியாத ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானார். ஆக, தற்போதைய அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை இல்லை. எனவே, விரைவில் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலொன்று நடைபெற்றால் சஜித் பிரேமதாஸவுக்கு தமிழ் முற்போக்கு கூட்டணி நிச்சயம் தோள் கொடுக்கும். சஜித் வெற்றி பெறுவார். அவரை எதிர்த்துப் போட்டியிடுபவர்கள் மண்ணைக் கௌவுவார்கள்.

ஏனெனில் பிரச்சினைகளை மட்டும் பேசாது, தீர்வையும் வழங்கும் சிறந்த தலைவராக சஜித் செயற்படுகின்றார். அவரின் ஆட்சியின்கீழ் மலையக மக்களுக்கும் விடிவு பிறக்கும். – என்றார்.

# கூலித்தொழிலாளர்கள் முறைமையை ஒழித்து சுதந்திர மலையகத்தைக் கட்டியெழுப்புவோம்!

## வேலுகுமார் திடசங்கற்பம்

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களை கூலித்தொழிலாளர்களாக வைத்து – பராமரிப்பதற்கு கட்டடங்கள் திறக்கப்பட்ட காலம் முடிந்துவிட்டது.

எனவே, கூலித்தொழில் முறைமையை ஒழித்து, சுதந்திரமான மலையகத்தைக் கட்டியமுப்ப வேண்டும். அதற்கான தொரு அடையாளமே தமிழ் முற்போக்கு கூட்டணியின் தாயகம். – என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணி யின் நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைமையகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் வேலுகுமார் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு –

தமிழ்முற்போக்குகூட்டணியின்தாயகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இது வெறும் கட்டட திறப்பு விழா அல்ல. மலையக சமூகத்தினுடைய அடையாளத்தைப் பிரதிபலிக்கும் நிகழ்வாகும். அதாவது ஒரு தேசிய இனத்துக்குரிய அம்சத்தை வெளிப்படுத்தியுள்ளோம். கடந்த 200 ஆண்டுகளில் மலையகத்தில் பல திறப்பு விழாக்கள் நடந்தன. பெருந்தோட்ட மக்களை கூலித்தொழிலாளர்களாகப் பராமரிக்கவே இதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றன.



இனியும் அவ்வாறான விடயங்களுக்கு இடமில்லை. கூலித்தொழில் முறைமையை ஒழித்து, தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்க வேண்டும். அதற்கான அடையாளமே இது.

சுதந்திரமான மலையக சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவைப்பாடு உள்ளது. அதற்கான ஆரம்பமாக இந்தத் தலைமையகம் அடையாளப்படுத்தப் படுகின்றது. எனவே, கூலித்தொழில் முறைமையை ஒழித்து புதிய மாற்றத்துக்குள் அடியெடுத்து வைப்பதற்கான தலைமைத்துவத்தையே எமது தலைவர்கள் வழங்க வேண்டும். மாறாக கூலித்தொழிலாளர்களாக எமது மக்களைப் பராமரிப்பதற்கான தலைமைத்துவத்தை வழங்கக்கூடாது. – என்றார்.

# உலகின் தலைசிறந்த நகைச் சுவை விருது ராஜபக்ஷவிற்கு வழங்கலாம்!

## ஜே.சி.அலவத்துவல நக்கல்

ராஜபக்ஷவின் முயற்சிக்கு உலகின் தலைசிறந்த நகைச்சுவைக்கான விருது வழங்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்துள்ளார்.

மக்களை நெருக்கடிக்குள் தள்ளிய ராஜபக்ஷக்களும் அவர்களது கும்பலும், அழுது அழுது சாம்பலில் இருந்து எழ முயற்சிக்கின்றது என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

எனவே மீண்டும் ஒருமுறை இந்தப் பொய்யான தந்திரங்களுக்குள் மக்கள் சிக்கிவிடக் கூடாது என ஜே.சி.அலவத்துவல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் ஊழல் குற்றச்சாட்டிற்கு உள்ளான உறுப்பினர்களின் வீட்டில் விசேட கூட்டங்கள் இடம்பெறுவதாகவும் ஜே.சி. அலவத்துவல சுட்டிக்காட்டியுள்ளார்.



எவ்வாறாயினும் இந்த ஊழல் இயக்கம் மீண்டும் எழுவதற்கு மக்கள் இடமளிக்கமாட்டார்கள் என ஜே.சி.அலவத்துவல நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## முடிவிற்கான கேள்விகள்

**அங்கம் - 167**

இந்தப் பதிவுகளின் ஆக்கங்களின் போது பல கேள்விகள் வாசகர்களாலும், வாசகர்களாகிவிட்ட நண்பர்களாலும் வைக்கப்பட்டன. சில சமயங்களில் குறிப்புகள் தந்து, பதிவுகளின் நடை ஓட்டத்தைப் பாதிக்காது, பின்னர் அவை பற்றி என்னால் முடிந்தளவில் பதிவிடக் கூடியவற்றைத் தருகிறேன் எனத் தெரிவித்திருந்தேன்.

நான் பங்கு பற்றிய 'போக்கஸ் தமிழ்' ஊடக நிகழ்ச்சியில் அடிக்கடி கேட்கப்படுவதும், அதிகமாக தொக்கி நிற்பதுமான கேள்விகள், இங்கு தரப்படும் தகவல்கள் ஆதாரப்பூர்வமானவைதானா, இவற்றில் பல தகவல்கள் ஏன் அவை நடைபெற்ற காலங்களில் வந்த பத்திரிகைகளிலோ ஊடகங்களிலோ பேசப்படவில்லை என்பதுதான்.

அத்தோடு எழுந்தது எனது செயற்பாடுகள் பற்றியது. நான் ஏன் சமாதான பேச்சுவார்த்தை காலங்களில் அறிவுரைகள் தரவில்லை, விடுதலைப் புலிகளின் முயற்சிகளுக்குத் தடையாகத்தான் இருந்து வந்தேனா என்பது.



மருத்துவர் சத்தியநாதன்

இவற்றிற்கு முதலிலேயே விளக்கங்களை தந்து விடுகிறேன். சோழ மன்னர்களின் வரலாற்றை பின்னணியாக கொண்டு கல்கி வரைந்த 'பொன்னியின் செல்வன்' நாவல் வடிவில் இது தமிழ் மக்களின் உரிமை போராட்டத்தை மையமாக வைத்து எனது எண்ணங்களையோ, கருத்துக்களையோ வெளிப்படுத்த வேண்டியதற்கான எழுத்தாக்கம் அல்ல. புனைவல்ல இது. வரலாறாகவே சம்பவங்கள் யாவும் ஆதாரப்பூர்வமாக பதியப்பட்டன. குறிப்பிடப்பட்டவர்கள் – விடுதலைப் புலிகள் கூட – பிரபாகரன் முதற்கொண்டு, நான் அறிந்திருந்தேன். அவர்களின் பலர் இன்னும் வாழ்கிறார்கள். சம்பவங்களை அவர்கள் அறிவார்கள்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு தீவிரமான ஆதரவும், பங்களிப்பும் தந்து, அதனை சர்வதேச மயப்படுத்துவதில் பணிபுரிந்து வந்தாலும், இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் பின் பிரபாகரன் அதனை எதிர்த்து எடுத்த முடிவுகளாலும், நடவடிக்கைகளாலும் எழுந்த கருத்து வேற்றுமைகளால் அவர்களுக்கான ஆதரவு குறைந்ததும், அவற்றை விமர்சித்ததும், நடந்தவை. இதனால் அவர்களுக்கு மாற்றானவன் என்ற பட்டியலில் வைத்து நடத்தப்பட்டவன். சமாதானப் பேச்சுக் காலங்களில் இடைக்கால கட்டமைப்பின் ஆக்க நேரங்களில், பிரபாகரன் நிலத்திலிருந்து நாம் இருவரும் அறிந்தவர்கள் மூலமும், புலத்திலிருந்தும், அவ்வாறு அணுகினார். அவர்களிடம் வைக்கப்பட்ட கேள்வி 'ரவி அண்ணா முன்னர் போல் எங்களோடு சேர்ந்து வேலை செய்வாரா?' என்பதுதான். அந்த அழைப்பை நான் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதும் உண்மை.

இங்கு என்னை உரிமையுடன் கேட்டவர் எனது அருமை நண்பர் மறைந்த வைத்தியர் சத்தியநாதன். விடுதலைப் புலிகளுக்காக தனது நேரம், சொத்து, சுகம் யாவையுமே தமிழன் மேல் இருந்த அன்பால் தந்தவர். சிவகுமாரனை யாழ்ப்பாண வைத்திய சாலையில் கவனித்த நாள்களில் இருந்து, பின்னர் லண்டனில் இயங்கிய தமிழர் தகவல் நிலையத்தின் ஊடாகவும், அதன்பின் அவர் ஆஸ்திரேலியாவுக்கு குடி பெயர்ந்து வந்த பின்னரும், நமது கருத்து வேறுபாடுகளுக்கு இடையிலும் தொடர்ந்து அவர் உதவிகள் தர வேண்டும் என்றும், விடுதலைப் புலிகளின் இடை, அடிமட்ட நிலைகளில் என்னை போன்றவர்களுக்கு எதிராக அபிப்பிராய பேதங்கள் இருந்தாலும், தான் பொறுப்பெடுத்து வன்னிக்கு அழைத்துச் சென்று, பத்திரமாகக் கொண்டு வந்து சேர்ப்பார் எனவும் உறுதிகள் தந்தார். ஆனாலும் அவற்றை நான் ஏற்கவில்லை. அது பிரபாகரனிலோ வைத்தியர் சத்தியநாதனிலோ நம்பிக்கையில்லாமல் இல்லை.

விடுதலை புலிகள் தங்களது நிலைப்பாட்டை விடாப்பிடியாக வைத்துக் கொண்டு, அதற்கு ஆதரவாக செயல்படுபவர்களைத் தேடுகிறார்கள். அவற்றுக்கு மாற்றான சிந்தனைகளால் அவர்களை மாற்றி விட முடியாது என நான் கருதியமைதான். அது அனுபவங்களில் கணித்தது.

அவர்களும் பிரபாகரனும் எடுத்துக் கொண்ட அந்த விடாப்பிடியான நிலைப்பாடுதான் மதியுரைஞர் பாலசிங்கத்தை அந்நியப்படுத்தியது. பின்னர் அவர்கள்



பிரபாகரன்

தங்களுக்கு வேண்டியதை, தாங்கள் கொடுப்பதை சட்ட வடிவங்களில் ஆக்கிக் கொள்வதற்கான ஆதரவுகளை நாடினார்களே ஒழிய, புதிய சிந்தனைப் பிறப்புகளுக்கோ, யதார்த்தங்களுக்கோ வழிவிட விரும்பவில்லை.

அப்படியாக பூகோள அரசியல் வலைப் பின்னல்களை அறிந்து கொண்ட அரசியல் புத்தி சாதுரியங்களோடு இடைக்கால கட்டமைப்பு ஆக்கப்படவில்லை என்பது அனுசரணையாளர்களினதும், பேச்சு வார்த்தைகளில்



பாலசிங்கம்

ஆதரவும் அக்கறையும் கொண்டு இருந்த சர்வதேச நாடுகளினதும் கருத்தாகவும் இருந்தது.

வைத்தியர் சத்தியநாதன் பலமுறை ஊக்குவித்தும் எனது மறுப்பை புரிந்து கொண்டாலும், தனது மனக்கிலேசத்தை வெளிப்படுத்தவில்லை. விரைவில் அவர் நோய்வாய்ப்பட்டு நினைவுகள் மறந்த நிலையில், விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டார்கள் என்பது தெரியாமலேயே மறைந்தார். அது நடந்திருந்தது தெரிந்திருந்தால் அவர் படும் பரிதவிப்பை வார்த்தைகளில் வடித்திருக்க முடியாது.

முடிவுக்கான போர் தொடந்த வேலைகளிலும், எம்மால் இயன்றளவு போர் நிறுத்தத்துக்காகவும், சரணாகதிக்கும் பாடுபட்டோம் என்ற மனச்சாந்தி உண்டு.

கருத்து வேற்றுமைகள் பற்றிய விரவங்களுக்குப் போகாமல் அவற்றை இத்தோடு விடலாம். கேட்கப்பட்ட மற்றவற்றை கேள்விகளும் பதில்களுமாகவுமே தருவது வசதியென எண்ணுகிறேன்.

கேள்வி: நோர்வேத் தரப்புகள் சமாதான பேச்சு வார்த்தைகளை நீதியாக நடத்தினவா? அல்லது அவர்கள் நடுநிலைமைத் தரப்பில் விட்டுக் கொடுத்து, விடுதலைப் புலிகளை அழிக்கும் சதிக்குத் துணை போனார்களா?

பதில்: தரப்பட்ட பதிவுகளில் இருந்து அதற்கான அபிப்பிராயங்களை அவரவர் மேற்கொள்ளலாம். 'துணைக்குப் போனாலும் பிணைக்குப் போகாதே!' என்ற பழமொழி உண்டு. முடிவுக்கான போர் என ஶ்ரீலங்கா தீர்மானித்த பொழுது, தாங்களே நோர்வேயின் சமாதானப் பணியை ஒருதலைப் பட்சமாக நீக்கியதும், நோர்வேக்கு எதிரான போராட்டங்களில் அவர்களது தேசியக் கொடியிலேயே பிரபாகரனது பொம்மைகளை கொண்டு ஊர்வலங்கள் வந்ததும், பின்னர் ஶ்ரீலங்காவின் வெளிவிவகார அமைச்சரே 'நோர்வேயால் சமாதானப் பணியை முன்னெடுக்கலாம் என நாங்கள் கருதவில்லை' என முகத்தில் அடித்தால் போல் ஊடகச் செய்திகள் தந்ததும் கவனிக்கப்பட வேண்டியவை.

ஆனால் அமைதி முயற்சிகளில் தமிழர் தரப்பை – விடுதலை புலிகளை – பொறுத்த மட்டில் அந்த முயற்சிகள் சீரழிவில்தான் முடிந்து, அதன் புரிதலும் பட்டறிவுகளும் வேறு விதமாக அமைந்தன என்ற அபிப்பிராயங்கள் தமிழ் மக்களிடையே உண்டு.

இவற்றைப் பற்றி மதியுரைஞர் பாலசிங்கத்தின் கருத்தை முதலில் நாளை கவனிக்கலாம்.

(வளரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

## ரயிலில் மோதிய .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீட்கப்பட்ட ஆண் ரயிலுடன் மோதி வித்துக்குள்ளானம்சியால் மரணமடைந்ததாரா? அல்லது ஏற்கனவே தாக்கப்பட்டு ரயில் பாதையில் போடப்பட்டுள்ளரா? அல்லது தற்கொலையா? என்ற அடிப்படையில்கனரகராயன்குளம்பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்தச்ச்சடலம் சேட் இன்றி, கறுப்பு காற்சட்டை அணிந்தவாறு காணப்படுகிறது. இவர் கனகராயன்குளம் பகுதியைச் சேர்ந்தவர் அல்லர் எனவும் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். இதனடிப்படையில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## போதைப் பொருளைக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடமாகாண ஆளுநர் செயலகத்தில் கலந்துரையாடலொன்று நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் வடமாகாணத்தில் போதைப்பொருள் பரவல் தொடர்பாகவும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ்ப்பாண மாவட்ட செயலர் க.மகேசன், பொலிஸ் அதிகாரிகள்,இராணுவத்தினர்,கடற்படையினர், சுகாதார கல்வித் துறை அதிகாரிகள், வைத்தியர்கள், துறைசார் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

வடமாகாணத்தில் போதைப் பொருள் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு மத்திய அரசாங்கத்தின் பூரணமான ஒத்துழைப்பு வழங்கப்படும் என நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ உத்தரவாதம் வழங்கினார்.




விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@ gmail.com











காலைக்கதிர் Kalaikkathir

# தேர்தலுக்கான நிதி உதவியை பெற்றுத்தருவதற்கு நாம் தயார்!

## லக்ஷ்மன் கிரியெல்ல கூறுகிறார்



தேர்தல்களைக் காலம் தாழ்த்தும் முயற்சிகளை அரசாங்கம் கைவிட வேண்டும். தேர்தலுக்கான தினத்தை அறிவித்தால் நிதி உதவிகளை வழங்கப் பல நாடுகள் தயாராக உள்ளன.

அவ்வாறில்லை எனில் எதிர்க்கட்சி என்ற ரீதியில் எம்மால் நிதி உதவியைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்று ஐக்கிய மக்கள்சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

புதிய வரி திருத்த சட்ட மூலம் தொடர்பில் எதிர்க்கட்சிகளுடன் பேச்சுகளை முன்னெடுக்காவிட்டால் அதனை ஆதரிக்க முடியாது என்று தெரிவித்த அவர், தற்போது எதிர்க்கட்சியிடமே பெரும்பான்மை பலம் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

தேர்தல் முறைமை தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமிக்குமாறு சபாநாயகருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு இதற்கான தெரிவுக்குழு தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நியமிக்கப்பட்டது. அன்று முதல் தற்போது வரை அந்தக் குழுவின் தலைவராக அவரே செயற்பட்டு வருகின்றார்.

2012 இல் 2 ஆயிரம் ஆகக் காணப்பட்ட உள்ளூராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை , தினேஷ் குனவர்தன தெரிவுக்குழுவின் தலைவராக பதவி வகித்த காலப்பகுதியிலேயே 8 ஆயிரம் ஆக அதிகரித்தது.

தற்போது அந்த எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என்கின்றனர். இதில் எமக்கு எவ்வித அதிருப்தியும் கிடையாது. ஆனால் இதனைக் காரணமாகக் காண்பித்து தேர்தலை காலம் தாழ்த்துவதற்கு இடமளிக்க முடியாது.

சர்வதேச நாணய நிதியமும் விரைவில் தேர்தலை நடத்துவதே பொறுத்தமானது என்று வலியுறுத்தியுள்ளது. ஆனால் தேர்தல் ஆணைக்குழு இந்த விடயத்தில் மந்த கதியாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

அரசாங்கம் புதிய வரி திருத்தம் தொடர்பில் எம்முடன் எவ்வித கலந்துரையாடல்களையும் முன்னெடுக்கவில்லை. ஆனால் அதற்கு எமது ஆதரவை மாத்திரம் கோருகின்றனர். சர்வதேச நாணய நிதியத்துடன் இரகசிய பேச்சுகளை முன்னெடுத்து , அரசாங்கம் இவ்வாறு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் தொடர்பாக வெளிப்படுத்துமாறு பல சந்தர்ப்பங்களில் கேட்டபோதும் , அரசாங்கம் அதற்கு எவ்வித பதிலையும் வழங்கவில்லை.

எதிர்க்கட்சிகளுடன் கலந்துரையாடாமல் வரி திருத்தச் சட்ட மூலத்தை அரசாங்கத்தால் நிறைவேற்றிக் கொள்ள முடியாது. காரணம் தற்போது நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிக்கே பெரும்பான்மை காணப்படுகிறது.

நாம் ஆதரவு வழங்கியிருக்காவிட்டால் 22 ஐ நிறைவேற்றியிருக்க முடியாது. பொதுஜன பெரமுன நாட்டை வங்குரோத்து நிலைமைக்குக் கொண்டு சென்றமையே இந்த வரி அறவீட்டுக் கொள்கைக்கான பிரதான காரணியாகும். எனவே, இதனை எம்மால் ஆதரிக்க முடியாது. புதிய வரி திருத்தம் தொடர்பில் எம்முடன் கலந்துரையாடாவிட்டால் அதற்கு எதிராகவே வாக்களிப்போம்.

தற்போது ஆளுங்கட்சியிலிருப்பவர்கள் அடிமைகளாகவே உள்ளனர். அவர்கள் அரசாங்கத்தின் தீர்மானங்கள் தொடர்பில் கேள்வியெழுப்புபவர்களல்லர். பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் வரி சலுகைகளை வழங்கியமை தொடர்பில், அவரது கட்சி உறுப்பினர்களே கேள்வி எழுப்பியமையே அவர் பதவி விலகக் காரணமாகும்.

எமது நாட்டில் அந்த கலாசாரம் கிடையாது. எது எவ்வாறிருப்பினும் தேர்தலை காலம் தாழ்த்தும் முயற்சியை அரசாங்கம் கைவிட வேண்டும்.

தேர்தலை நடத்துவதற்குத் தீர்மானித்தால் அதற்காக நிதி உதவிகளை வழங்குவதற்கு பல நாடுகள் முன்வரும். அவ்வாறில்லை எனில் எதிர்க்கட்சி என்ற ரீதியில் எம்மால் நிதி உதவிகளைப் பெற்றுக் கொடுக்க முடியும். எனவே செலவுகளைக் காரணமாகக் காண்பித்து தேர்தலை பிற்போடும் முயற்சி வெற்றியளிக்காது. – என்றார்.

# சஜித் பிரேமதாஸவின் ஆட்சியிலேயே மலையகத்தில் மறுமலர்ச்சி உறுதி!

## இராதாகிருஷ்ணன் நம்பிக்கை



சஜித் பிரேமதாஸவின் தலைமையிலான ஆட்சியின் கீழ் மலையகத்தில் மறுமலர்ச்சி ஏற்படுவது உறுதி என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் அமைந்துள்ள கேம்பிரிட்ஜ் கல்லூரி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

எமது மக்களின் வலி, வேதனை ரணசிங்க பிரேமதாஸவுக்கு புரிந்தது போல, சஜித்துக்கும் நல்ல தெளிவு உள்ளதோடு மலையக பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கை முறைமையை மாற்ற வேண்டும் என வலியுறுத்துகின்றார் எனவும் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மேலும் கல்வி, சுகாதாரம், அரசியல், இருப்பு என்பன முறையாக இடம்பெற சஜித் இந்நாட்டின் பிரதமராகவோ, ஜனாதிபதியாகவோ வரவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இன்றும் ராஜபக்ஷக்களுக்கு அதிகாரப் பேராசை உள்ளது!

## சரத்பொன்சேகா எடுத்துரைப்பு



நாட்டு மக்கள் தற்போது அனுபவிக்கும் துயரங்களுக்கு தாமே காரணம் என்பதை உணராமல் மீண்டும் தேர்தலில் போட்டியிடப் போவதாகக் கூறும் ராஜபக்ஷக்களின் ஆட்சி அமைக்கப்பட்டால் தற்போதுள்ளதை விட கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியேற்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வசந்த முதலிகே உள்ளிட்டோரை பார்வையிடுவதற்காக சென்றிருந்த சரத்பொன் சேகா ஊடகங்களுக்குக்கருத்து வெளியிடும்போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ராஜபக்ஷக்களுக்கு இன்றும் அதிகார பேராசை காணப்படுவதோடு இதுவரை கொள்ளையடித்து, திருப்தியடைய முடியாமலேயே அவர்கள் மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு, வெற்றி பெறுவோம் என்று பேசிக்கொண்டிருக்கின்றனர். எனினும் அவர்கள் முன்னெடுக்கும் இந்த முயற்சி ஒழுக்கமானதல்ல. இவ்வாறான செயற்பாடுகளுக்கு உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் வரவேற்பிருக்காது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முன்னாள் போராளிகளின் தகவல்களை திரட்டுவது சிறைக்குள் இருக்கின்ற உணர்வையே ஏற்படுத்தும்!

## அருட்தந்தை சத்திவேல் வருத்தம்



முன்னாள் போராளிகள் ஏற்கனவே திறந்த வெளி சிறைக்குள் இருக்கின்றனர் என உணரும் நிலையில் தகவல்கள் திரட்டும் செயற்பாடு சிறைக்குள் இருக்கும் உணர்வையே ஏற்படுத்தும் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார். அவரால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

முன்னாள் போராளிகளின் தகவல்களை நீதி அமைச்சின் கீழ் உள்ள தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க அலுவலகம் திரட்டுவதாகச் செய்திகள் வந்துள்ளன.

என்ன நோக்கத்துக்காக இந்தத் தகவல்கள் திரட்டப்படுகின்றன? என்பது தொடர்பில் முன்னாள் போராளிகள் மட்டுமல்லர் பொதுமக்களும் அச்ச உணர்விலேயே உள்ளனர்.

இது தொடர்பில் நீதி அமைச்சு தெளிவான விளக்கம் கொடுக்க வேண்டும். அத்தோடு வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பி மக்களுக்குத் தெளிவூட்டல் பெற்றுக் கொடுப்பதோடு பாதிப்பு ஏற்படும் எனில் தடுத்து நிறுத்துவதற்குக் கூட்டான செயற்பாட்டிலும் ஈடுபட வேண்டும்.

அண்மையில் கொழும்பில் வெள்ளத்தை போன்ற தமிழர் அதிகமாக வாழும் பிரதேசங்களில் வீடுகளில் தங்கி இருப்போர் தொடர்பாகப் பொலிஸார் தகவல் திரட்டுகின்றனர் எனவும் அவ்வாறான தகவல் படிவங்களை எவரும் நிரப்பி கொடுக்க வேண்டாம் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் பகிரங்கமாகக் கூறியமையோடு, இது தொடர்பில் பொலிஸ்மா அதிபருடனும், ஜனாதிபதியுடன் வினவுவதாகக் கூறியிருந்தார்.

இது இவ்வாறு இருக்க, தற்போது தமிழர்களை அச்சத்தில் ஆழ்த்தும் வகையில் தமிழர் பகுதியில் முன்னாள் போராளிகளின் தகவல்கள் திரட்டப்படுகின்றன எனக் கூறப்படுகின்றது.

முன்னாள் போராளிகள் ஏற்கனவே திறந்த வெளி சிறைக்குள் இருப்பதாகவே உணரும் நிலையில், தகவல்கள் திரட்டும் செயற்பாடு சிறைக்குள் இருக்கும் உணர்வையே ஏற்படுத்தும். இது உள ரீதியிலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதோடு சுயமாகவே முன்னாள் போராளிகள் தமது ஜனநாயக செயற்பாட்டை மட்டுப்படுத்திக் கொள்ள வழிவகுக்கும். இது அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

அண்மையில் அரசு கொண்டுவர முனைந்த புனர்வாழ்வு தொடர்பான திருத்தச்சட்டம் சமூகத்தில் எழுந்த சலசலப்பும் மக்களின் எதிர்ப்பும் சட்ட சிக்கலும் காரணமாகத் தடுத்து நிறுத்தப்பட்டது. அச்சட்ட அமுலாக்கத்தை வேறு வகையில் நிறைவேற்றுவதற்காக முன்னாள் போராளிகளின் தகவல்கள் திரட்டப்படுகின்றனவா?

தெற்கின் போராட்டக்குழுவினர் தொடர்ச்சியாக பல்வேறு காரணங்களை முன்வைத்து அரசிற்கு எதிரான வீதிப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள தங்கள் சகாக்கள் மூன்று பேரை விடுவிக்குமாறும், பயங்கரவாதத் சட்டத்தை நீக்குமாறும் கோரிக்கை விடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் பயங்கரவாதச் சட்டத்தைத் தொடர்ந்து வைத்திருக்க முன்னாள் போராளிகளின் தகவல்கள் திரட்டப்படுகின்றனவா?

இத்தகைய தகவல் திரட்டும் ஏற்பாடு முன்னாள் போராளிகளின் ஜனநாயக ரீதியான ரீதியிலான மாற்று அரசியல் செயற்பாட்டையும் அது தொடர்பான சிந்தனையையும் தடுக்கும். இது அவர்கள் சார்ந்த குடும்ப உறுப்பினர்களின் சுதந்திர நடமாட்டத்தைக் கூடப் பாதிக்கும்.

அது மாத்திரமல்ல, தற்போது மறைமுகமாகப் படையினரும் புலனாய்வுப் பிரிவினரும் இயங்குகின்ற நிலையில், முன்னாள் போராளிகளின் தகவல்கள் திரட்டும் செயற்பாடு நேரடியாகவே அரச படைகள் தமிழர்களைக் கண்காணிப்பில் வைத்திருக்கவும், தமிழர்கள் வாழும் கிராமங்களைத் திறந்த வெளி புனர்வாழ்வு கிராமங்களாக்கவும் பேரினவாதம் முயற்சிக்கலாம். இது உடனே தடுத்து நிறுத்தப்படல் வேண்டும். – என்றுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.11.2022இல் வெளியிடப்பெற்றது.